# BANGALORE TAMIL SANGAM

59, Annaswamy Mudaliar Road, Bangalore - 560 042.

Phone : +91 80 25551357, 25510062, Fax : +91 80 2555 1357

## 68th Annual General Body Meeting Notice

Dear Members,

Notice hereby given to all the members of Bangalore Tamil Sangam that the 68th Annual General Body Meeting of the Sangam will be held on Sunday the 18th November 2018 at 11.00 am at Sangam's Thiruvalluvar Auditorium to transact the following business.

## AGENDA

1. Invocation
2. Reading of the Notice by Secretary
3. Welcome Address by the President
4. Submission of Report of the 67th Annual Generalbody Meeting.
5. To consider and Adopt Annual Report 2017-2018.
6. To consider and Adopt Audited Statement of Account 2017-18.
7. To consider and Adopt Budget 2018-2019.
8. Appointment of Auditor for the year 2018-2019.
9. Any other Subject raised by the member in writing on or before 5-11-2018
10. Any other subject with the permission of the Chair.
11. Introduction of the candidates for the period 2018-2020 by the Returning officer.
12. Vote of thanks by Secretary.

Date : 20-10-2018

**T. G. Damodharan**
President

**S. Ramasubramanian**
Secretary

# 68ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு

பேரன்புமிக்க உறுப்பினர் பெருந்தகையீர், வணக்கம்.

சங்கத்தின் 68ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் 18-11-2018 ஞாயிறு காலை 11.00 மணிக்கு திருவள்ளுவர் அரங்கில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் உரிய நேரத்தில் கூட்டத்தில் பங்கு பெற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

1. மொழிப்பண்
2. பொதுக்குழு அறிவிப்பைப்படித்தல் - செயலாளர்
3. வரவேற்புரை - தலைவர்
4. 67ஆம் ஆண்டு பொதுக்குழு அறிக்கை.
5. 68ஆம் ஆண்டு அறிக்கை.
6. 2017-2018ஆம் ஆண்டின் தணிக்கை செய்யப் பெற்ற கணக்கறிக்கை.
7. 2018-2019 வரவு செலவுத் திட்டம்
8. 2018-2019 தணிக்கையாளர் அமர்த்தம்
9. 5-11-2018க்குள் உறுப்பினர்களால் எழுத்தின் மூலம் கொடுக்கப்பட்ட வினாக்களுக்குச செயற்குழுவின் இசைவுடன் விடையளிக்கப்படும்.
10. தலைவர் இசைவுடன் பிற செய்திகள்.
11. 2018-2020ஆம் பருவச் செயற்குழுவிற்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகம், தேர்தல் பொறுப்பாளர்.
12. நன்றியுரை - செயலாளர்

குறிப்பு : ஆண்டறிக்கை, கணக்கறிக்கை தொடர்பான வினாக்களை 5-11-2018க்குள் சங்கச் செயலாளரிடம் சேர்க்க வேண்டுகிறோம். சங்கச் செயற்குழுவின் ஒப்புதல் பெற்ற வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்கப்படும்.

20-10-2018

| | |
|---|---|
| **தி. கோ. தாமோதரன்** | **எஸ். இராம. சுப்பிரமணியன்** |
| தலைவர் | செயலாளர் |

# 2018-2020ஆம் பருவத்திற்குரிய தேர்தல் அறிவிப்பு

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் 2018-2020ஆம் பருவத்திற்குரிய செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க **25-11-2018** ஞாயிறன்று தேர்தல் நடைபெறும். தேர்தலுக்கு முன் மூன்று திங்களுக்குள் உறுப்பினர் தகுதி பெற்றுள்ள புரவலர், வாழ்நாள் உறுப்பினர்கள் மட்டும் வாக்குரிமை பெறுவர். வேட்புமனுக்கள் **5-11-2018** முதல் சங்க அலுவலக நேரத்தில் மட்டுமே கிடைக்கும். தேர்தலில் போட்டியிட விரும்பும் உறுப்பினர்கள் சங்க நடைமுறை விதிகளின்படி தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் விடுபட்டு இருந்தாலோ, பிழைகள் இருந்தாலோ **9-11-2018**க்குள் எழுத்துவழி தொடர்புடைய உறுப்பினர்களே தெரிவித்துச் சரிசெய்து கொள்ளவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் :

| | | |
|---|---|---|
| தலைவர் | : | ஒருவர் |
| துணைத்தலைவர் | : | ஒருவர் |
| செயலாளர் | : | ஒருவர் |
| பொருளாளர் | : | ஒருவர் |
| துணைச்செயலாளர்கள் | : | நால்வர் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | ஒன்பதின்மர் |
| வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | : | 05-11-2018 |
| பட்டியல் திருத்தம் பெற இறுதி நாள் | : | 08-11-2018 |
| வாக்காளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | : | 09-11-2018 |
| வேட்டுமனு ஏற்க இறுதிநாள் | : | 13-11-2018 |
| வேட்பாளர் பட்டியல் வெளியிடும் நாள் | : | 14-11-2018 |
| வேட்பாளர் மனுக்களைத் திரும்பப்பெற இறுதிநாள் | : | 16-11-2018 |
| வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியிடும் நாள் | : | 17-11-2018 |
| தேர்தல் நாள் | : | 25-11-2018 |

**09-11-2018** அன்று வெளியிடப்படும் வாக்காளர் பட்டியலே இறுதியானது. அதற்கு பிறகு எந்தத் திருத்தமும் ஏற்றுக்கொள்ளப் பெறாது. **தேர்தல் நேரம் : காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.**

குறிப்பு : வேட்பு மனுக்களை **5-11-2018** முதல் சங்க அலுவலக நேரத்தில் பொறுப்பாளர்களிடமோ, அவரால் பரித்துரைக்கப் பெற்றவரிடமோ தங்கள் இரு நிழற்படத்துடன் (பாஸ்போர்ட்) நேரில் அளித்துப்பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிட இயலும். போட்டியில் இருந்து விலக விரும்புவோர் தம் விண்ணப்பத்தை 16-11-2018ஆம் நாளுக்குள் சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு நேரில் அளித்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

சங்க உறுப்பினர்கள் தங்கள் நிழற்படம் தாங்கிய சங்க வாழ்நாள் உறுப்பினர் அடையாள அட்டை கொண்டு வரவேண்டும். இல்லாதவர்கள், தமது வாழ்நாள் உறுப்பினர் எண்ணுடன் கூடிய ஊற்று ஜூன் இதழ் (அ) வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் கார்ட், டிரைவிங் லைசென்ஸ் முதலிய ஏதாவது ஒன்றை உடன்கொண்டு வரவேண்டும். கொண்டுவந்தால் மட்டுமே வாக்களிக்க உரிமை பெற்றவர்கள் ஆவர். **தேர்தல் தொடர்பான ஐயங்களில் தேர்தல் பொறுப்பாளரின் முடிவே இறுதியானது.**

புலவர். **எஸ். பத்மநாபன்**
தேர்தல் பொறுப்பாளர்
சங்கத்தேர்தல் 2018-2020

பெங்களூர்-42
நாள் : 20-10-2018

# 2018-2020 ஆம்
# ஆண்டுப் பருவத் தேர்தல்
# அறிவிப்பு

**பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தேர்தல் நவம்பர் திங்கள் 2018இல்** நடைபெற உள்ளது. சங்கச் செயற்குழு சங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு இப்பருவத்தேர்தல் பொறுப்பாளராகப் **புலவர். எஸ். பத்மநாபன்** அவர்கள் அமர்த்தப் பட்டுள்ளார்.

**மேலும் அவர் சங்கத்தில் அவர் வகித்துவரும் பொறுப்பிலிருந்து விலகல் கடிதம் அளித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

தி. கோ. தாமோதரன்
தலைவர்